முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்**

# AA1 பரீட்சை - 2019 சனவரி

# (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2019-02-02
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல்* ***வினைச் சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினைந்து (15) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றில் சரியான கூற்றாக அமைவது எது?

(1) முகாமைக் கணக்கீடானது வெளிவாரி நாட்டதாரர்களுக்கு (external stakeholders) மட்டுமே தகவல்களை வழங்குகின்றது.

(2) நிதிக் கணக்கீட்டின் பிரதானமான நோக்கமாக அமைவது மோசடிகள் மற்றும் வழுக்களைத் தடுப்பதாகும்.

(3) ஊடுசெயல்களானவை கணக்கீட்டு செய்முறையின் கணக்கீட்டு வெளியீடாகும்.

(4) தொடர்புடைமை (Relevance) என்பது நிதித் தகவல்களின் அடிப்படை தரரீதியிலான ஓர் பண்பு ஆகும்.

(02 புள்ளிகள்)

**1.2** ஒரு நிறுவனத்தினால் பின்பற்றப்படும் தேய்வீட்டுமுறை மீதான கணக்கீட்டுக் கொள்கையானது, பல வருடங்கள் ஈறாக மாறாமல் பிரயோகிக்கப்படல் வேண்டும். இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கோட்பாடு கீழ்வருவனவற்றுள் எது?

(1) தொடர்ந்தியங்கும் தன்மை (Going Concern) கோட்பாடு

(2) உரிமம் (Entity) கோட்பாடு

(3) கொள்கை மாறாமை (Consistency) கோட்பாடு

(4) தேறுகை (Realization) கோட்பாடு (02 புள்ளிகள்)

**1.3** வரவுத்தாள் (Debit Note) என்பது:

(1) சில காரணங்களுக்காக திருப்பி அனுப்பப்பட்ட பொருட்களின் பெறுமதியைக் குறைத்து, கொள்முதல் செய்தவரால் விற்பனையாளருக்கு வழங்கப்படும் ஆவணம்

(2) ஏற்கனவே வழங்கப்பட்ட சிட்டையின் (Invoice) பிரகாரம் விற்பனையாளருக்கு கொள்முதல் செய்தவர் செலுத்தவேண்டிய தொகையைக் குறைத்து, விற்பனையாளரால் கொள்முதல் செய்தவருக்கு வழங்கப்படும் ஆவணம்

(3) இரு தரப்பினருக்கிடையில் பணம்சார் ஊடுசெயல் நடைபெற்றமைக்குச் சான்றாக பயன்படுத்தக்கூடிய ஆவணம்

(4) ஒரு நிறுவனத்திற்கு காசு கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்தி நிறுவனத்தின் பொறுப்புவாய்ந்த ஒரு நபரால் வழங்கப்படும் ஆவணம் (02 புள்ளிகள்)

**1.4** கடன்கொடுத்தோருக்கான காசுக் கொடுப்பனவானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் பாதிப்பை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) சொத்துக்களில் வீழ்ச்சியும் பரிப்புக்களில் வீழ்ச்சியும்

(2) சொத்துக்களில் வீழ்ச்சியும் பரிப்புக்களில் அதிகரிப்பும்

(3) பரிப்புக்களில் வீழ்ச்சியும் உரிமையாண்மையில் வீழ்ச்சியும்

(4) பரிப்புக்களில் வீழ்ச்சியும் உரிமையாண்மையில் அதிகரிப்பும் (02 புள்ளிகள்)

**1.5** கீழ்வருவனவற்றுள் எந்தத் தொகுதி ''வருமானக் கூற்றின்'' கூறுகளை உள்ளடக்கியுள்ளது?

(1) சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் (2) பரிப்புக்கள் மற்றும் வருமானம்

(3) செலவினங்கள் மற்றும் உரிமையாண்மை (4) வருமானம் மற்றும் செலவினங்கள்

(02 புள்ளிகள்)

**1.6** கீழ்வரும் தகவல்கள் **மூன் லங்கா டிரேடர்ஸ்** இன் 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன.

| விபரம் | ரூ. |
|---|---|
| மூலதனம் –2017 ஏப்ரல் 01 ஆந் திகதியில் | 750,000 |
| ஆண்டினபோது உட்படுத்திய மேலதிக மூலதனம் | 50,000 |
| பரிப்புக்கள் – 2018 மார்ச் 31 ஆந் திகதியில் | 75,000 |
| மொத்தச் சொத்துக்கள் – 2018 மார்ச் 31 ஆந் திகதியில் | 987,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபமாக அமைவது:

(1) ரூ. 112,000/- (2) ரூ. 237,000/- (3) ரூ. 187,000/- (4) ரூ. 162,000/-

(02 புள்ளிகள்)

**1.7** பின்வருவனவற்றுள் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரதான கோப்பிற்கு (master file) உதாரணமாக அமைவது எது?

(1) பிரதான இருப்புக் கோப்பு (2) பிரதான சம்பளப்பட்டியல் கோப்பு

(3) பிரதான கடன்பட்டோர் கோப்பு (4) மேற்கூறிய யாவும்

(02 புள்ளிகள்)

**1.8** கீழ்வரும் தகவல்கள் **ABC டிரேடர்ஸின்** 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **ரூ.** |
|---|---|
| விற்பனை | 750,000 |
| கொள்வனவு | 425,000 |
| இருப்பு – 2018 மார்ச் 31 இல் | 250,000 |
| மொத்த இலாபம் | 187,500 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2017 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இருந்த இருப்பின் பெறுமதியாக அமைவது:

(1) ரூ. 112,500/- (2) ரூ. 387,500/- (3) ரூ. 575,000/- (4) ரூ. 262,500/-

(02 புள்ளிகள்)

***1.9* முதல் *1.15* வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி, அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.**

**1.9** நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.10** விற்பனைச் சிட்டையில் (sales invoice) உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.11** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் தற்காலிக கோப்புகளை வைத்திருப்பதற்கான நோக்கத்தைச் சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

**1.12** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகளைக் கூறுக:

(a) உண்மையான கொடுப்பனவை கருத்தில் கொள்ளாது குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களைக் கணக்கிற் கொள்ளுதல் வேண்டும்.

(b) ஒரு நிறுவனக் காணியை அதன் கொள்வனவு விலையில் நிதிநிலைக் கூற்றில் காட்டுதல்

(c) கடன்பட்டோர் மீதியிலிருந்து ஐயக் கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(03 புள்ளிகள்)

**1.13** **சமந்தா டிரேடர்ஸ்** இயந்திரமொன்றினை ரூ. 900,000/- இற்கு 2016 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்தது. கம்பனியின் கொள்கையானது இயந்திரத்திற்கு குறைந்துசெல்லும் மீதி முறையில், ஆண்டிற்கு 25 % இல் பெறுமானத்தேய்வு செய்வதாகும்.

2018 மார்ச் 31 ஆந் திகதியிலான இயந்திரத்தின் முன்கொணரற் பெறுமதியைக் (நிகர புத்தகப் பெறுமதி) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

**1.14** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் கூறுக. வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக எழுதி, அவற்றிற்கான சரியான விடையை (சரி / தவறு) என எழுதுக.

(a) பொதுப் பேரேடானது ஒரு முதன்மைப் பதிவேடாகும்.

(b) பெயரளவுக் (Nominal) கணக்குகள், நிறுவனத்தின் செலவினங்கள் மற்றும் வருமானக் கணக்குகளைக் கொண்டிருக்கும்.

(c) அலுவலகப் பாவனைக்காக ரூ. 100,000/- பெறுமதியான கணினியொன்றை கடனடிப்படையில் கொள்வனவு செய்வதானது நிதிநிலைக் கூற்றிலுள்ள சொத்துக்களை மாத்திரம் பாதிக்கின்றது.

(d) ஒரு கொடுக்கல் வாங்கலானது கணக்குப் புத்தகத்திலிருந்து முற்றாக விடுபட்டிருந்தால் அது பரீட்சை மீதியின் சமப்படுத்தலைப் பாதிக்கும். (04 புள்ளிகள்)

**1.15** ***ரசீன்*** என்பவர் ***ரசீன் டிரேடர்ஸின்*** தனியுடமையாளர் ஆவார். ***ரசீன் டிரேடர்ஸின்*** கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊடுசெயல்களுக்கான சரியான இரட்டைப் பதிவுகளைக் குறிப்பிடுக:

(a) மீள்விற்பனைக்கான பொருட்களின் காசுக் கொள்வனவு ரூ. 95,500/- .

(b) ***ரசீன்*** தனது மகனின் பிரத்தியேக வகுப்புக் கட்டணமான ரூ. 24,000/- ஐ கம்பனிக் காசிலிருந்து செலுத்தியிருந்தார்.

(c) ***ரசீன்*** தனது தனிப்பட்ட ரூ. 1,000,000/- பெறுமதியான காணியை கம்பனியில் மேலதிக மூலதனமாக ஈடுபடுத்தினார். (06 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**ரணசிங்க** ரூ. 750,000/- காசினை முதலீடு செய்து 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி **ரணசிங்க டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார். 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு ஆகியவற்றின் தொகுப்பு கீழ்வருமாறு:

| **காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு (பெறுவனவுகள்)** | **ரூ.** |
|---|---|
| **ரணசிங்க** உள்ளிட்ட மூலதனம் | 750,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறுவனவு | 1,200,000 |
| காசு விற்பனை | 625,000 |
| | **2,575,000** |

| **காசுப் கொடுப்பனவு நாட்குறிப்பேடு (கொடுப்பனவுகள்)** | **ரூ.** |
|---|---|
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 1,575,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 225,000 |
| மின்சாரக் கட்டணம் | 89,000 |
| தளபாடக் கொள்வனவு | 75,000 |
| நீர்க் கட்டணம் | 23,000 |
| சில்லறைக் காசு மீள்நிரப்பல் (imprest) | 25,000 |
| எடுப்பனவுகள் | 100,000 |
| | **2,112,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2018 மார்ச் 31 இலான வருமதிகள் மற்றும் சென்மதிகள் மீதி கீழ்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 78,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 125,000 |
| அட்டுறு மின்சாரம் | 12,500 |

(2) சில்லறைக் காசு ஊடுசெயல்கள் கீழ்வருமாறு:

**சில்லறைக் காசு கட்டுப்பாட்டுக் கணக்கு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 25,000 | அமய கூலி (casual wage) | 5,800 |
| | | போக்குவரத்துச் செலவுகள் | 3,500 |
| | | மீ.கீ.கொ.செ. | 15,700 |
| | **25,000** | | **25,000** |

(3) சகல கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 மார்ச் 31 இல் எவ்வித இருப்புகளும் காணப்படவில்லை.

(4) 2017 ஒக்ரோபர் 01 இல் தளபாடமொன்று ரூ. 75,000/- க்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவை நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு கிரயத்தில் 20 % பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 ஆந் திகதியில் **ரணசிங்க டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் பாடசாலைப் பைகளின் உற்பத்தியாளரான **வரையறுக்கப்பட்ட கோட் லங்கா நிறுவனத்தின்** 2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையவை:

| | ரூ. |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | 2,100,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 675,000 |
| தொழிற்சாலை இயந்திரப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 175,000 |
| எரிபொருட் செலவுகள் | 120,000 |
| மூலப்பொருளுக்கான உள்வந்த வண்டிக்கூலி | 110,000 |
| மின்சாரக் கட்டணம் | 200,000 |
| கட்டட வாடகை | 600,000 |
| தொழிற்சாலை பாதுகாப்புச் செலவுகள் | 135,000 |
| தொழிற்சாலை இயந்திரம் - கிரயத்தில் (2017 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 1,000,000 |
| நேர்கூலி – உற்பத்தி ஊழியர்கள் | 720,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) தொக்குகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| | **2017 ஏப்ரல் 01 இல்** | **2018 மார்ச் 31 இல்** |
|---|---|---|
| மூலப்பொருட்கள் | 3,400,000 | 2,000,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 1,600,000 | 985,000 |

(2) **கோட் லங்கா நிறுவனத்தின்** கொள்கையானது தொழிற்சாலை இயந்திரத்தினை நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு கிரயத்தில் 25 % தேய்மானம் செய்வதாகும்.

(3) கட்டட வாடகை, எரிபொருட் செலவுகள் மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

தொழிற்சாலை – 75%

அலுவலகம் – 25%

(4) உற்பத்தி செய்யப்பட்ட பாடசாலைப் பைகளானவை கிரயத்தில் 10% இலாபத்துடன் வியாபார பிரிவுக்கு மாற்றப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **கோட் லங்கா நிறுவனத்தின்** உற்பத்திக் கணக்கைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

2018 மார்ச் 31 ஆந் திகதியில் **ஹுசைன் டிரேடர்ஸின்** உதவிக் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமான ரூ. 32,500/- தொங்கற் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன:

(1) 2018 மார்ச் மாதத்திற்கான பாதுகாப்புச் செலவினமான ரூ. 78,000/- ஆனது பாதுகாப்பு செலவினக் கணக்கில் ரூ. 7,800/- ஆகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(2) வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான ரூ.225,000/- பெறுவனவானது ரூ. 22,500/- ஆக வியாபாரக் கடன்பட்டோர் கணக்கில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) ரூ.75,000/- பெறுமதியான இயந்திரப் பராமரிப்புச் செலவினமானது இயந்திரக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(4) ரூ.55,000/- பெறுமதியான அட்டுறு தொலைபேசி கட்டணமானது கணக்கேடுகளிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளது.

(5) ரூ. 114,800/- பெறுமதியான காசு விற்பனையானது விற்பனைக் கணக்கில் இரு தடவைகள் பதிவுசெய்யப்பட்டது. ஆயினும் இது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(6) வாடகைச் செலவினம் ரூ. 25,000/- ஆனது வாடகை வருமானக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) 2018 மார்ச் மாதத்திற்கான கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் **றியல் எலக்ரிக்கல்ஸின்** கடன் விற்பனையுடன் தொடர்புடையனவாகும்:

| திகதி | சிட்டை இல. | வாடிக்கையாளர் பெயர் | உருப்படி விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | விபரம் | கணியம் | அலகு ஒன்றின் விலை | வியாபாரக் கழிவு |
| 2018.03.02 | 256 | **கிறீன் டிரேடர்ஸ்** | ஆளிகள் (switches) | 75 | 115 | - |
| 2018.03.15 | 257 | **திரு. நிஹால்** | மின்குமிழ்கள் | 100 | 230 | 10% |
| 2018.03.30 | 258 | **சந்தன ஸ்டோர்ஸ்** | ஆளிகள் | 110 | 115 | - |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018 மார்ச் மாதத்திற்கான **றியல் எலக்ரிக்கல்ஸின்** விற்பனை நாளேட்டினைத் **தயாரிக்குக.**

(04 புள்ளிகள்)

(B) **விஜயசூரிய** 2018 செப்ரெம்பர் 01 இல் தனியுடமை நிறுவனமொன்றை ஆரம்பித்தார். கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் 2018 செப்ரெம்பர் மாதத்திற்கான அவரது கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 2018.09.01 | ரூ. 800,000/- காசாக முதலீடுசெய்து **விஜயசூரிய** வியாபாரத்தை ஆரம்பித்தார். மேலும் நிறுவனத்தின் பொருள் விநியோகத்திற்காக தனது தனிப்பட்ட ரூ. 1,500,000/- பெறுமதியுடைய வாகனத்தை மேலதிகமாக முதலீடு செய்தார். |
| 2018.09.05 | ரூ. 625,000/- பெறுமதியான பொருட்கள் மீள்விற்பனைக்காக கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2018.09.18 | ரூ. 375,000/- கிரயமான பொருட்கள் ரூ. 485,000/- ற்கு காசு அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 2018.09.26 | ஊழியர் சம்பளம் ரூ. 125,000/- செலுத்தப்பட்டது. |
| 2018.09.28 | **விஜயசூரிய** தனது தனிப்பட்ட தேவைக்காக ரூ. 35,000/- பெறுமதியான காசினை வியாபாரத்திலிருந்து எடுத்துள்ளார். |
| 2018.09.30 | கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக ரூ. 125,000/- கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது:**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களின் தாக்கத்தினையும் **பதிவுசெய்க.**

[நடைமுறையல்லாச் சொத்துக்கள் (நிலையான சொத்துக்கள்) + தொக்கு + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**சம்பத் டிரேடர்ஸ், சம்பத்**திற்குச் சொந்தமான தனியுடைமை வியாபாரமாகும். 2018 மார்ச் 31 இலான **சம்பத் டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**சம்பத் டிரேடர்ஸ்**

**2018 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணி | 6,000 | |
| கட்டடம் | 4,500 | |
| கணினிகள் | 500 | |
| அலுவலக உபகரணம் | 1,200 | |
| திரள் தேய்மானம் - 2017 ஏப்ரல் 01 இல் | | |
| கட்டடம் | | 2,400 |
| கணினிகள் | | 140 |
| அலுவலக உபகரணம் | | 390 |
| விற்பனைகள் | | 19,500 |
| கொள்வனவுகள் | 8,850 | |
| இருப்பு – 2017 ஏப்ரல் 01 இல் | 1,900 | |
| வட்டி வருமானம் | | 200 |
| வியாபார வருமதிகள் | 5,850 | |
| வியாபார சென்மதிகள் | | 3,200 |
| செலுத்தப்பட்ட காட்சியறை வாடகை | 1,890 | |
| மின்சாரம் | 990 | |
| நீர் | 145 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,650 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 2,100 |
| விற்பனைப் பணிசை (தரகு) | 450 | |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 275 | |
| ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு – 2017 ஏப்ரல் 01 இல் | | 560 |
| எடுப்பனவுகள் | 250 | |
| நிலையான வைப்பு (03 மாதம்) | 6,000 | |
| 2017 ஏப்ரல் 01 இல் மூலதனம் | | 11,960 |
| | **40,450** | **40,450** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2018 மார்ச் 31 ஆந் திகதி கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் பெறுமதி ரூ. 2,100,000/-.

(2) வியாபாரத்தின் கொள்கையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தின்மீது கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்வதாகும்:

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 10% |
| கணினிகள் | : | 25% |
| அலுவலக உபகரணம் | : | 20 % |

(3) 2018 மார்ச் மாதத்திற்கான செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணமான ரூ. 75,000/-, 2018 மார்ச் 31 இல் கணக்கேடுகளில் பதிவுசெய்யப்படவில்லை.

(4) வியாபார வருமதிகள் மீதியிலிருந்து ரூ. 40,000/- ஐ பதிவழிக்க முகாமை தீர்மானித்திருந்ததுடன் 2018 மார்ச் 31 ஆந் திகதி நிலுவையிலிருந்த வியாபார வருமதி மீதிகள் தொடர்பில் ஐயக்கடனுக்கான பொது ஏற்பாட்டை 10 % ஆக மேற்கொள்ளவும் முகாமை தீர்மானித்திருந்தது.

(5) காட்சியறைக்கான வாடகை உடன்படிக்கையான ஒரு வருட காலப்பகுதிக்காக 2017 ஏப்ரல் 01 இல் மேற்கொள்ளப்பட்டது. மாதாந்த காட்சியறை வாடகை ரூ. 189,000/- ஆகும்.

(6) 03 மாத நிலையான வைப்பிற்கான வட்டியானது வட்டி வருமானக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |